I certify that this is true copy
[signature] Editor

KACHCHERI 2-JUL 1930

Registered as a Newspaper at the G. P. O.

# ஜனதர்ம போதினி

# JANA DHARMA BOTHINY

OR

## NEW JAFFNA.

A Monthly Newspaper

"சமன்செய்து சீர்தூக்குங்கோல் போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி"

| சந்தா விபரம். | |
|---|---|
| தபாற்செலவின்றி வருஷம் ஒன்றுக்கு ரூ | 1-00 |
| தபாற்செலவுட்பட ,, ,, ,, | 1-25 |
| மலாய்நாட்டிற்கு ,, ,, ,, | 2-00 |
| வி. பி. சார்ஜ் பிரத்தியேகம் | |
| முற்பணமாகவே அனுப்பவேண்டியது. | |

| விளம்பர விகிதம் | | | |
|---|---|---|---|
| 1 | கலம் முதன்முறை | ரூ | 5-00 |
| $\frac{3}{4}$ | ,, ,, | ,, | 4-30 |
| $\frac{1}{2}$ | ,, ,, | ,, | 3-00 |
| $\frac{1}{4}$ | ,, ,, | ,, | 2-00 |
| அடுத்தமுறைகளில் $\frac{1}{2}$ வாசி. | | | |
| சில்லறை விளம்பரங்களுக்கு முற்பணங்கட்டவேண்டும். | | | |

புத்தகம்—1. | யாழ்ப்பாணம்-தெல்லிப்பழை:-பிரமோதூத ஹூ ஆனிமீ (1930) ஜூன்மீ | இலக்கம்—2.

## அறிவிப்பு.

இப்பத்திரிகையில் இராசத் துவேஷம் மதத்துவேஷமான காரியங்கள் இடம்பெறு. சாதிஸ்தாபனத்துக்குரிய எந்தவித விஷயமும் பிரசுரிக்கப்படமாட்டாது. கடிதங்கள் விஷயங்கள் புதினங்கள் யாவும் பத்திராதிபருக்கு அனுப்பப்படவேண்டும்.

விலாசம்:—

பத்திராதிபர்
ஜனதர்மபோதினி
தெல்லிப்பழை.

ஜனதர்மபோதினி

சாதி பேத மார்க்க பேதமின்றி ஒடுக்கப்படும் மக்களுக்காக உழைக்கும் இப் பத்திரிகை ஒடுக்கப்படுந் தமிழ் மக்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டியது. உடனே இப்பத்திரிகையின் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். வருஷ சந்தா ரூபாய் ஒன்று.

என்னதேள்வை? பணத்தேள்வை

ஒடுக்கப்படுந் தமிழரின் ஊழிய சங்க வேலைகளை உற்சாகமாய் நடத்தவும் தொடங்கிய வேலை ஒழுங்காய் முடிக்கப்படவும நண்பர் ஒவ்வொருவரும் வறுமைக்குள்ளிருந்தாலும் இயன்றளவு மிச்சிறிய தொகையேனுங் கொடுத்து எங்கள் பொக்கிஷத்தை யாதரிக்கும்படி கேட்கிறோம். இது எங்கள் ஒவ்வொருவரினதும் பெருங்கடன் என்பதை மறவாதிருக்கும்படி நினைப்பூட்டுகிறோம்.

S. R. JACOB.
தமிழர் ஊழியசங்கம்
தெல்லிப்பழை.

## விளம்பரம்.

S. MARCHELIN.
Pawn Broker
Hospital Road
Jaffna.

அடைவுபிடிக்க உத்தரவுபெற்றவர். இவ்விடத்தில் தற்கால நாகரீகத்துக்கேற்ற நகைகளும் தங்கப்பவுனும் எந்த நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

ச. மருசலின்,
ஆஸ்பத்திரி றோட்
யாழ்ப்பாணம்.

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னைநிக ரில்லாத தனித்தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்
காயாது கனியாகிக் கலத்தினிக்குந் தெய்வம்
கருணைநிதித் தெய்வமுற்றுங் காட்டுவிக்குந் தெய்வம்
சேயாக வெனைவளர்க்குந் தெய்வமகா தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

என்னிதயக் கமலத்தே யிருந்தருளுந் தெய்வம்
என்னிரண்டு கண்மணிக்கு ளிலங்குகின்ற தெய்வம்
பொன்னடியென் சென்னியிலே பொருந்தவைத்த தெய்வம்
பொய்யாத தெய்வமிடர் செய்யாத தெய்வம்
அன்னியமல்லாத தெய்வ மறிவான தெய்வம்
அவ்வறிவுக் கறிவாமென் னன்பான தெய்வம்
சென்னிலையிற் செம்பொருளாய்த் திகழ்கின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

யாழ்ப்பாணச் சாதிக்கொதி

## பள்ளிக்கூடத்தலைவர்மாரின் இரண்டாம் கூட்டம்

தமக்கொருநீதி பிறர்க்கொருநீதி.

பள்ளிக்கூடத் தலைவர்மார் முதல் இராமநாதன்கல்லூரியிற் கூடியாலோசித்ததில் எங்களை யொடுக்கும் முறை சரியாய் வகுக்கமுடியவில்லை. இரண்டாம் முறை சென்றமாசம் 22-ம் திகதி இந்துக்கல்லூரியிற்கூடி யாழ்ப்பாணச் சாதிவார்ப்புச்சாலையெனுந்தொழிற்சாலையாக்க யோசித்து முடிவு செய்துகொண்டது. பயனற்றதாக வேமுடியும் சாதியெனும பவுந்திரத்துக்கு மூடிபோட்டாலும் அது உடையத்தொடங்கியதால் உண்டான துர்நாற்றம்நாறியேதீரும். பெரிய மனுஷரும், வைத்தியநிபுணரும், உயர் சம்பளத்தினரும் கவுன்சில் மெம்பர்மாருங்கூடி காலுபக்கமும் எந்தவிதமான பந்தோபஸ்துசெய்துகட்டினாலும் கொதிக்கத்தொடங்கியசாதியெனுங்கட்டு மேற்தோலிற் கண்வைத்து உடைக்கத்தொடங்கிவிட்டது. இதை உடனே சத்திரவைத்தியஞ்செய்து உள்ளேயிருக்கும அழுக்கு முழுவதையுஞ் சுத்தஞ்செய்து மருந்திட்டு புண்ணையாற்றவேயொழிய மாறுபடி வேறோர் விதமாயும் மறைக்கக்கூட்ட முடியாது. இப்படி மறைப்பதால் இன்னுமின்னும சமிழ் எனும் உடம்புகெட்டு இரத்தம் பழுதுகி விஷமேறி முழுவதும் அழிந்து இறந்துபோக வேண்டிவருமேயன்றி சுகம்பெறுமென்பதைப் பதினெழு மகேசர்சர்மாருக்குத் தனித்தனியே கூறுகிறோம். தெய்வத்தின்மேல் ஆணையிட்டு இச்சத்திரமேக தேசாபிமானத்துடன் எடுத்துக்கூறுகிறோம்.

அந்த தலைவராயிருந்த ஸ்ரீ வை. துரைசாமியவர்கள். தாம் சமாதான விஷயத்தை யங்கீகரிப்பவரொன்று கூறியதைவிட்டு மிகவும் சந்தோஷப்படுகிறோம். ஆனால் ஊரவர்கள் எதிர்ப்பதால் சனவிருப்பை யோசித்தறிந்து "சமாதானம்" செய்துபார்க்க விரும்புவதாய்க்கூறினா. ஆகவே அவர்கள் தமது நோக்கஞ் சுத்தமென்றும் ஊரவர் நோக்கம் பிழையென்றுங் கூறிவிட்டார். ஆகவே இவர்கள மறுமனைச் சர்மாருக்கு இதைவிட்டு ஆலோசனைகூறிச்சனங்களின கொதிப்பை யடக்கவேண்டியவழியெடுப்பதைவிட்டு உடன்சகோதரருக்கு எதிர் வேலைசெய்யுங் கூட்டமாகத் தாம் தலைமைவகித்ததைவிடப் பெரிதும் வருந்துகிறோம். பெரியவர்கள் செய்யும் அநேக பெரியகாரியங்கள் உள. அவற்றிநாப ஒடுக்கப்படுவோர் பெரிதும நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம. ஆனல பிள்ளையுங்கிள்ளித் தொட்டிலையுமாட்டும பெரியமனுஷர் பலர் செய்வது பிழையெனக்கூறுவதிற தடன கேட்டுக்கொள்ளுகிறோம.

ஆந்துடக்டர் தம்பையா குரவர் அவர்கள்

(1) ஒவ்வோர் கிராமமும் தன்தன் பாடசாலையின் பவித்திரத்துக்கு பொறுப்புள்ளது.

(2) தெய்வாதீனமாயன்றி மற்றப்படி எந்தக் கிராமத்திலாவது யாதொருபாடசாலையில் எதா

(3-ம் பக்கம் தொடரும்.)

# ஜனதர்ம போதினி

பிரமோதூத ஸ்ரீ ஆனிமீ.


## மாணவர் மகா நாடு.

"யாழ்ப்பாண மாணவர் மகா நாடு" எனுஞ் சங்கத்தார் கொண்டுள்ள இரு விசேஷ இலக்குகளுள், ஒன்று சுயராட்சிய இலக்கு மற்றொன்று அநாகரீக சாதிக்கொடுமை நிவாரண இலக்கு. இவ்விரண்டையுஞ் சேர்த்துச்சொன்னால் ஒருவர் இன்னொருவரால் ஆளப்பட்டு அடிமைப் படுத்தப்படுதலான அவமான நிஷ்டூரத்தினின்றும் விடுதலை பெறவேண்டு மென்பதே யாழ்ப்பாண வாலிபரின் இலக்காகும்.

யாழ்ப்பாணத்தில் மூன்றுவிதமான நோக்கங்கள் சனங்களிற் கிரியை செய்கின்றன. எம்முட் சிலரை எழியவரென்று சொல்லி அடக்கி நடத்தி அடிமைகளாய் வைத்திருக்க வேண்டுமென்பதும் அத்துடன் பிரித்தானிய ஆட்சியின் கீழே அடிமைகளாய் இராமல் அவர்களை யோட்டிக் கலைத்து சுயராட்சிய மெனுங் குதிரைச் சவாரி செய்யவேண்டும் என்பதும் ஒருசாரார்நோக்கு.

சாதி வித்தியாசமோ எம்மை வேரோடு பாறச்செய்யும் பெருங்கறையான். ஆதலால் இச்சாதியெனும் சனியனைத் தொலைப்பதும் பிறர் ஆழுகைக் கீழ் அடங்கியிராது சுய ஆழுகையடைய வேண்டிய பிரயத்தனங்களைக் கையாடுவதும் இன்னொர்சாரார்நோக்கு.

தம் சொந்தச் சனங்களால் ஒதுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு இம்சிக்கப்படுவதாகிய கொடுமையினின்று நீங்கவேண்டு மென்பதும் இதற்குரிய ஒரே வழி பிரித்தானிய அரசாட்சியெனும் ஆங்கில அரசரின் பக்தி நிறைந்த பிரசைகளா யிருப்பதேயென்பதும் மற்றொரு சாரார் நோக்கு.

மாணவர் மகா நாட்டினர் முழுவதுமே காந்தியடிகளின் போதனையைச் சாதிப்பவர்கள். அவருட் சிலர் அடிகளின் போதனையிற் தம்புத்திக் கொவ்வாதவற்றைத் தள்ளியும், மற்றவற்றை யேற்றும் நடந்துகொண்டிருக்கிறார். சாதியென்பது பிறப்பினால் அமைந்ததல்ல வென்பது அடிகள் கொள்கை, சாதிபேதமே இந்திய சன சமூகத்தை உருக்குலைத்த தென்பது அவர்களின் மூலாதார கொள்கை சாதிக்கொடுமை நிக்கிரகஞ் செய்யப்பட்டாலேமட்டும் இந்தியா தன் பூர்வ நிலையை யெய்து மென்பது இவரின்அபிப்பிராயம். இந்த ஒரு விஷயத்தை மட்டுந்தள்ளி மற்றெல்லாவற்றையும் ஏற்போம் என்பதும் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் காந்தியடிகள் மனந்திரும்ப வேண்டு மென்பதும் யாழ்ப்பாண வேஷகாந்திகள் பலரின் நோக்கு. கிறிஸ்துபகவானும் இவ்விஷயத்திற் பிழை செய்து போட்டாரென்பதும் கிறிஸ்து தமது காலத்தில் சாதிபேதங் காட்டி நடவாதது பெரியவோர் மாற்ற முடியாத பிழையாய் முடிந்ததென்பதும் தற்கால யாழ்ப்பாணக் கிறிஸ்தவர்களிற் பெரும்பாலோரின் அபிப்பிராயமெனில் மிகையாகா.

மாணவரின் சாதி எதிர்ப்புக் கொள்கையும் தற்கால துவேஷத்துக்குக் கால். ஆனால் அதை அவர்கள் அனுட்டிக்காவிடின் தனித்தனியாளின் சுயாதீனமும் கூட்டுறவுச் சுயாதீனமும் உண்டாகாதெனும் உண்மை வாலிபர்மனதைக் கட்டிக்கொண்டது. பிறப்பினால்உண்டானசாதிபேதத்தை எதிர்ப்பது தெய்வத்துரோக மெனுங் கொள்கையுடையவாலிபர் உளர் சாதிபேத அனுட்டிப்புக்கன்றி மறுப்புக்கு வரோமென்பது சில வாலிபரின்பிடி இதுவே சரியெனச்சொல்லும் ஒடுக்கப்படுவோரும் உளர். இக்கொள்கைக் காரருக்கு வாலிபர் மகாநாட்டில் இடமிராதென்பது நிச்சயம்

தமிழறிஞரும் விரிந்த உணர்வினரும் சைவசமய மாண்பினரும், சாதிசைவமதத்தில் இல்லையெனுங் கொள்கையினருமான பேரறிவாளரே மாணவமகா நாட்டின் தலைவராய் வீற்றிருந்த ஸ்ரீமான் S. சிவபாதசுந்தரமவர்கள். தேசமுன்னேற்றத்துக் கேதிரிடை செய்து கூக்குரலிடும் பசாசின் மதம் சைவ சமயமல்ல என்னும் மெய்க் கொள்கை இவர்கள் மூலமாய் யாழ்ப்பாணத்தில் பரவ வழியாகும். அத்துடன் தீண்டாமையெனுங் கொடும் விஷமானது வர்ணாச்சிரமமெனும் வீண் சிரமத்திற் தோன்றுதோழியும். சமரசக்கொள்கை சாதி நிக்கிரக கொள்கையாகும்.

---

### துவி நாதச் சுழல்.

வே. ச. மாணவர் எழுதியது.

---

சென்றமாசம் வெளிவந்த இந்துசாதனமொன்றிற் சமாசனமெனுந் தலையின கீழ்கோப்பாய் மு. சுவாமிநாதனென்பவர் "கௌரவ பொ இராமநாதனவர்கள் எளிய சாதியாராகக் கொள்ளப்படுதல் அவர்கள் நடையின் நிமித்தமேயன்றி வேறொன்றைப்பற்றியல்லவென்றும், உதாரணமாக கருவாடு வெடுக்கெடாத மீன் முதலிய உணவுகளைச் சாப்பிட்டு கைகளைச் சரிவரச்சுத்தஞ் செய்யாது தாங்கள் உடுத்திருக்குந் துணியிற்தானே தெய்த்துத்துப்பரவுசெய்கிற பழக்கமுடையவர்களாகையால் அப்பிள்ளைகளிலுள்ள துர்நாற்றமும் அழுக்குத்துணியும் சுத்தமும் புனிதமுமுள்ள பிள்ளைகளுக்கு அருவருப்பைக் கொடுப்பது மாத்திரமல்ல சிரங்கு முதலிய சருமரோகங்களுக்குக் காரணமாகுமென்பதினாலேயே எங்கள் பிள்ளைகள் அவர்களைத் தீண்டவும் அவர்களோடு புழங்கவும் ஏதுவுண்டாகாமல் எச்சரிக்கையெடுத்துக் கொள்ளுகின்றோமென்ற சாரப்படிபேசினார்." என்று எழுதியிருக்கவும் அத்துடன் தொடர்பாய் பத்திராதிபரும் Rev. Bro. பிலிப்ஸ் அவர்களைச்சாட்சிசொல்வதற்கிழுக்கவுங் கண்டோம். "சாரப்படிபேசினார்" என்பதால், எழுதப்பட்டது அவர்பேசிய சொற்களாயிருக்குமோவென்பது சந்தேகமெனினும் ஒருபட்டியிலாடுகௌளானமையின் இவ்வசனங்களின உண்மைகளைச் சற்று உற்றுநோக்குவோம்.

ஆக்கிரகாரனுக்கு புத்திமத்திபம் இதிலும் வயது ஏறினால் அதமமாயும் முடியுமோவென்பது யோசிக்கக்கிடக்கின்றது. தமது உள்ளக்கிடக்கையைத் துர்நோக்கத்தை மறைத்துப் பேசத்தொடங்குபவர் "புன்புலால் நாற்றம் புறம் பொதிந்து மூடினுஞ் சென்றுதைக்குஞ் சேயார்முகத்து" என்பதைமறந்து தமது தீய எண்ணமாகிய புலால் நாற்றத்துச்கு ஒதுக்கிடமாக புலால் நாற்றத்தையே உதாரணமாக எடுத்துக்கொண்டார் எழியவரென ஒருவரைப் புறக்கணிப்பதும், நிந்திப்பதும், அடிமையாட்சிசெய்வதும், தமக்கு மகிமையும் உயர்வுமென்று கருதும் கோப்பாய், புன்னாலைக்கட்டுவன், ஏழாலை, பலாலி யாதிய இடத்துப் பெரியோர் அஃது தமக்கு அவமரியாதையும் தாழ்வுமென்று கருதும் அவ்விடப்பெரியோரினும் பார்க்கப்பெரியோரா என்பதும் எண்ணப்படவேண்டியது.

பள்ளர், பறையர், நளவருடன் எங்கும் சமாசனஞ் சமபோசனம்செய்யுமொருவர், ஏசென்ற் வீட்டில்கவர்ணர்வீட்டில் விருந்துக்கொண்டாட்டங்களிற் கண்டகண்டவர் கண்டகண்டபடி சமைத்துக்கொடுக்க உண்ட ஒருவர், வாடிவீடுகளிற் போசன ... சாதிபேதென உசாவ வழியற்ற ஒருவர் ... குற்றமற்ற பச்சைப் பாலர்களான வம்பறியாத அபாயமறியாத கபடமில்லாத சுத்தமான பிள்ளைகட்கு ஆசனம் கொடுக்கும் விஷயத்தில் ஏதேதெல்லாம் எழுதியும் பேசியும் ஊரெல்லாம் அல்லோல கல்லோல முண்டாக்கி இடர்ப்படுகின்றார். எழியசாதியாராகக்கொள்ளப்படுதல் அவர்கள் நடையின் நிமித்தமேயெனின் எழிய நடையுடையவரே எழியசாதியாரென்பது பெறப்படும். குறிக்கப்பட்ட சிலசாதியார் மட்டும் எழிய நடையினரா? அல்லது வேளாளராதிய சாதியாரினும் எழிய நடையுடையவர் ஒருவர் அல்லது பாதி ஆளாவது உண்டா என்றகேள்வியை சிறிமான் சுவாமிநாதனிடம் கேட்கவோ? அல்லது அவர் சுட்டும் சிறிமான். இராமநாதனிடம் கேட்கவோ? எளிய நடையென்பது என்னவோ? காதல், கவருடல், கள்ளுண்டல், பொய்மொழிதல், ஈதன்மறுத்தல், எனுங் குற்றங்களையா? இவைகளே பெரியோர் கூறும் எழியதொழில்களாகும். இத்தொழிலுடையோர் எழிய நடையினராவர். இப்படிப்பட்ட எழிய நடையுடைய பிராமணர் வேளாளர் ஆதியவர் பள்ளர் பறையரா? குணத்தினாற் சாதிபிரிக்குமிடமும் நடையினாற் சாதிபிரிக்குமிடமும் வித்தியாசங்கக் கூட்டமா? அப்படியாயின் அது வேடிக்கைதான். வித்தியாசங்கக் கூட்டத்தில் உண்டாகும் ஞானம் சுடலைஞானம் போல் ஒருவருக்குண்டானால் அது அம்மட்டுடன் நின்றுவிட்டதா? இல்லையேல் யாழ்ப்பாணத்திற் தற்போதுள்ள பெரிய சாதியாரின் எழிய நடையைக்காட்டி அவருடன் சமாசனஞ் செய்யாமலும் அவர்புத்திரர்கட்கு பள்ளிக்கூட பிரவேசவிலக்கு, ஆசனவிலக்கு, போசனவிலக்கு சாதிச் சைவவிலக்கு, சமயச்சைவவிலக்கு ஆதிய விலக்குகளை யாக்காது போவதும் ஏனோ?

சாதிபேதத்தைஸ்தாபிக்கத் தொடங்கி, அதற்குக் "கால்படக்குற்றம் கைபடக்குற்ற" மென்றபடி எழிய நடையுடையோர் எழிய சாதியாரெனுஞ் சாட்டைச்சொல்லத்தொடங்கி எல்லாரையும் மூடராக்கி முடிக்கின்றார்களே எம்பெரிய மனுஷர்.

இரண்டாவதாகக் கடிதர் "கருவாடு வெடுக்கெடாத மீன் முதலிய உணவுகளைச் சாப்பிடுதல்" என்கிறார், இதையெழுதும் நான் மீன் உண்பவன் என்னுடன் படிக்கும் ஊசாடும் அநேகர் நூற்றுக்கு 90 வீதத்திற்குக் குறையாதோர் மீனுண்பவர். இவரில் எவராவது மீன் வெடுக்கு எந்தெந்தமீனில் எங்கெங்கேயுண்டென்று காட்டுந்தரத்தில் காணோம். மீனில் வெடுக்கெடுப்பதையெங்குங்காணோம். வெடுக்கு மீன்களில் எடுக்கப்படக்கூடியதாய் எங்கெங்குண்டென்று காட்ட ஏதாவது நூல்களுண்டோவென்றுபார்த்துங்காணோம் மீனில்வெடுக்கு என்று ஒன்று எடுக்கப்படக்கூடியதாய் அமைந்திருக்கவுங்காணோம். மீன்களில் வெடுக்குக் கூடிய மீன்கள் சிலதுமட்டுமுண்டென்றும், வெடுக்கு ஊனுள்ளவற்றில் ஏகமேசெறிந்திருக்கிறதென்றும், மட்டும் எமக்குத்தெரியும், Mr. சுவாமிநாதனுவது அவர்கூறியமற்றவராவது வெடுக்கு விஷயமாய் எழுதும்போது இப்பத்திரிகை தாராளமாய் இடங்கொடுப்பது ஜனதர்மமாகும். வெடுக்கு எடாத அல்லது வெடுக்கு அமைந்த காய்ந்த அல்லது காயாத மீன்களைச் சாப்பிடுபவர்யாரோ அவர்களே எழியநடையினரென "உதாரணமாக" என்பதால் விளங்கினோம். சபாஷ் இது இரண்டாம் புரட்சி என்போம். அதாவது யாழ்ப்பாணத்தில் மீனுண்போர் யார்? முதலாவது பிராமணர். இரண்டாவது வேளாளர் என்று உண்மையைச் சொல்லப் போனால் எழியநடையினராய் விலக்கப்படுபவர் கோப்பாயில், புன்னாலைக்கட்டுவனில், ஏழாலையில் இல்லையா? மீனுண்ணுமெழிய நடையினரான மேல்சாதி எழியவர் சமாசனவிலக்கு போசனவிலக்கு முதலியவிலக்குகளில் எங்கே விலக்கப்பட்டாரோ? இப்படிமீனுண்ணுஞ் சாதிகள் விலக்கப்படின் (மூர்க்கிரனெழுதிய காதல் கவருடலாதி

ய எழியதொழில்களுடையவருடன் கூட) விலக்கப்படாத ஒரு பெரியவரை யாழ்ப்பாணத்தில் எடுக்கலாமோ என்பது கேள்வி. அப்படியல்ல குறிக்கப்பட்ட சிலசாதிகளில் மீனுண்பவரையே குறித்தோம் என்பார்களா? அல்லது கைகழுவாது ஆங்கிலேய பழக்கவளக்கத்திற் கைதுடைக்கத் துடைதுணியின்றி உடுத்தவேட்டி பாவாடைகளிற் துடைக்கும் உயர்சாதி மீனுண்ணிகளையே குறித்தோம் எனபாரா? அல்லது துடைதுணியறியாது தமது உடுத்ததுணிகளிலேயே துடைத்துப்பழகிய குறித்த சிலசாதிகளையே சுட்டினோமெனபார? மீன்பிடிசாதிகளான சிலசாதிகள் இருக்கிறார்களே, அவர்கள் மீன்பிடித்தும் பிடித்தவைகளைப் பறிகடகம் முதலியவைகளிலிட்டுச் சுமந்தும் இறக்கியும் அரிந்தும் வெட்டிக் கீறிக்காயப்போட்டும காய்ந்தவைகளைப் பொறுக்கி அடுக்கியும் வீடுகளிற் சிப்பங்களாய்க்கட்டியும் விற்றும் இப்படியான தொழில் செய்கிறார்கள். வெடுக்கெடுத்த அல்லது எடாத மீன்களுடன் புளங்குவதே தமது தொழிலாகச் செய்யும் இவர்கள் எச்சாதியாராய் யாழ்ப்பாணத்தில் மதிக்கப்படுகிறாரென்று கடிதரைக்கேட்கிறோம். அச்சாதிகளின் பிள்ளைகள் மீனுண்பதில்லையா? அவர்கட்கும் வேளாண் பிள்ளைகட்கும் பட்டும் கைகழுவ சுத்திசெய்ய தாராளமான தண்ணீர் கிட்டுவதா? அல்லது அப்படிச் சுத்திசெய்யும் பழக்கம் அவர்கட்கும் கிடைக்கும் பழக்கம இவர்கட்கும் மாத்திரமுண்டா? அவ்வளவு அணுகமுடியாத துர்நாற்றமும். அழுககுத் துணியும இவர்கட்கு மாத்திரமுண்டென்று சொல்வதே துர்நாற்றமென்பதையுணர முடியாதபடி போதிக்கத் தொடங்கியதே மோசமென்போம். கடையில்சந்தையில், தெருவில், பட்டுச்சேலையுடுத்தி ஆயிரம் ரூபாய் நகைபணிந்து மீன்வாங்கி வெடுக்கடிக்க உண்டு வாய்வயிறெல்லாம் துர்நாற்ற மடிக்க நடக்கும் யாழ்ப்பாணத்தமிழர் யாவரும் எழிய நடையினரென்போமா? இதை விரித்தெழுத யார்தான் மறுப்பர். 'ஆசைவெட்கமறியாது!'

இன்னும் குறித்த சாதிகள் சிலவற்றில் மீனுண்ணார் உளரே. அவர் எப்படிப்பட்டவரோ? எனுங் கேள்வியைக்கேட்டால் அவர் பெரிய நடையினரெனவும் சமாசனம் சிங்காசனம் அவருக்கு விலக்கப்படவில்லையெனவுஞ் சொல்வரோ? இன்னும் எழிபநடையாகிய "மீனுண்ணுஞ் செயலாளரின் அழுக்குத்துணியும்துர்நாற்றமும் சிரங்குமுதலிய சருமரோகங் களுக்கும் காரணமாகுய" என்கிறார். படிப்பது திருவாசகம் தான். இப்படியான குணம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது மெய்யாகவே சாதிக்கொடுமையினாலேயென்போம். தன்னெஞ்சறிவதைப் பொய்த்துக்கூறி நடக்கும் பெரியோராலேயே யாழ்ப்பாணம் அடிமை நாடாயிருக்கின்றது. இன்னும் இதுசிறழிந்த தீக்கணகிசையடையும் வரைக்கும் எம்நாட்டவரின் மௌட்டீகம் விட்டகலாது. மீனுண்ணாதவர் சொறிகிற சொறியும் அவர் உடம்பிற்படிந்துள்ள படைகள் சிரங்குகளும் மெய்பாவே மீனுண்பவரின் உடனிருந்ததலா அல்லது குறிக்கப்பட்டவருணத்தார் யாவரோடுனும் இருந்தலாலா என்பது விளங்கவில்லை. இதன் உண்மை பொய்யறியின் மீனுண்ணாதவர்கள் வீட்டிற் போய்ப்பார்த்தல் நன்று. அவர்கள் வீடுகட்டியகாலந்தொட்டு கழுவாமலிருந்தாலும் வெள்ளையடியாதிருந்தாலும் வீட்டுத்தூண்கள் நாட்டப்பட்ட நாட்தொடங்கி அதிற்சாரும் சனங்களின் ஊத்தையால் சுற்றளவில் மூன்றங்குலங்கூட விருந்தாலும அவர்கட்டில்கள் மூட்டைப்பூச்சிகளின் உறைவிடமாயிருந்தாலும பாய்கள் படுப்பாய்கள்போல அங்குலத்தடிப்பேறி யிருந்தாலும் தலையணைகள் சீசனுந் தொடவிரும்பாத எண்ணைப்பாணியும் மண்ணுஞ்சேர்ந்த சுகந்த கலவைசசாந்து நிறையப்பெற்றிருந்தாலும அவரிற் சிரங்கென்னும் பகவான் கிட்டவேவரான். மீனே பிறவியிலும் உண்டறியாத பறைய, பள்ள, நளவ, அயபட்ட வண்ணார, தச்ச, கொல்லப் பிள்ளைகள் மட்டும் கிட்டவந்துவிட்டால் உடனே சிரங்கு பிடித்துக் குரங்காய் விடுவர் எம்மீனுணாப் பெரியோர்.

கடைசியிற் பத்திராதிபர் விஷயம் அப்படியிப்படியிருப்பின் ஸ்ரீ சுவாமிநாதனுடைய பின்கூற்றுப்பயனற்ற கூற்றாகுமென்கிறார். முன் கூற்றுப்பயனுள்ளதாகவே அவரும் ஏற்றுக்கொண்டாராம். இன்னும் கனம் Brother பிலிப்ஸ் அவர்களை பத்திராதிபர் சாட்சிக்கிழுத்தாலும் அவர்கூறும முன் கூற்றுந்தாலும் கனம் Brother பார்வையில் பயனற்ற கூற்றுமென்ப. கூற்றுவன் நல்லோரெனனன் தீயோரென்னான். அவன் மீனுண்போன் எழியோரென்னான். எவரும் பெரியோராயிருக்கவழி தேடவேண்டுமென்பதுதான ஜனதர்மம. அஃதில்லாமை அதர்மமாம்.

---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வது அழிவு உண்டானால் அழிவுசெய்தோரைக் கண்டுபிடிக்கவுந் தண்டிக்கவும் கிராமத்தவர் கடமைப்பட்டவர்.

(3) ஏதொரு கிராமத்திலாயினும் பள்ளிக்கூடங்களுக்கு அழிவுசெய்யப்படின அதற்கு நட்ட ஈடுகட்டக் கிராமத்தார் கடமைப்பட்டவர். இந்த நட்ட ஈடு கிராமத்தில் வரிமூலம் அறவிடப்படும் எனும் தீர்மானங்களைக்கொண்டுவந்தார்கள்.

கனம் லொக்வூட் ஐயர் "பாடசாலைமேனச்சர்மார் வித்தியாதிகாரியின் பிரமாணத்தை மதிப்பீனஞ்செய்ய எந்தவிதத்திலும் உரிமையற்றவர்கள் என்றும், தாம் அரசாட்சியாரின் பிரமாணத்தை நிலை நிறுத்துவதற்கு எதிரான எந்தவித நிர்ணயத்தையும் கொண்டுவருபவர்களைச் சேர்ந்தவரல்ல" என்றுங்கூறி வெளியேறினர்.

ஸ்ரீமான். த. கபிலாயபிள்ளையவர்கள் "இந்து சாஸ்திரப்படி சாதிநிலையான ஸ்தாபனம், சாதி கற்பழிக்கப்படுவதிலும் பார்க்கப் பள்ளிக்கூடங்கள் குறைக்கப்படல் வேண்டியது. இங்கிலந்து அமெரிக்காவில் சாதிவித்தியாசங்கள் இருந்தன" என்றுசொன்னதுடன சமாசனம் எனும் பொது உரிமைக்கு எதிர்பேசுவோர் ஒருகிராமத்தில் நூற்றுக்கு 75 பேர் வீதம் இருந்தால் அக்கிராமத்தில் இப்பிரமாணம் அவர்கள் எண்ணப்படி விடப்படல் வேண்டுமெனப் பிரேரித்தனர். V. சபாபதிப்பிள்ளையென்பவர் அனுவதிக்க 5 பேர்தவிர ஏனையவர் ஒருமுகமாயினர்.

அப்பால் கனம் பிச்னல் அவர்கள் "ஒருகாரியத்தை எப்போதும் சனங்களின் பெரும்பாலானோரின் விருப்பப்படி தீர்க்கமுடியாது. பள்ளிக்கூடமனேச்சர்மார் திரள்சனங்களைச் சரியான வழியை விட்டுப் பிழையாய் நடத்துவது ஆகாது. நானறிந்தபடி நான் இருக்கிற கிராமத்தில் உத்தமரான இந்துக்களும கிறிஸதவர்களும் இவ்விஷயத்தில் என்னுடன் ஒத்த நல்லெண்ணமுடையவர்கள், சனங்களின் பெரும்பாலாரிலே நல்லொழுக்க சோதனைசெய்தல் அவசியமில்லை. நெருப்பிடல் விஷயமாய்த் திட்டமான ஐமிச்சமும் அது கிராமத்துள்ளோர் தாமாகவே உண்டாக்கும் நடபடியெனும் நிச்சயமும் எனக்குண்டு, தீயிட்டெரித்தல் கிராமத்தலைவர்களான வழிகாட்டிகள் பின்னின்று நடத்துந்தொழில். இததொழிலை இவர்கள் செய்வதுபிழை. அரசாட்சிப் பிரமாணத்தைக் கைக்கொள்ள முழுப்பிரயத்தனமுஞ் செய்யும்படி இச்சபையைக்கேட்கிறேன்" என்று கூறிமுடித்தனர்.

அடுத்த ஸ்ரீமான். சோமசுந்தரமென்பவர் "பலாத்காரமான சமாசனவற்புறுத்துதலினால் ஒடுக்கப்படுஞ்சாதிகள் பாடசாலைகளிற் புறம்பாய் ஆசனத்திருக்கும் வசதிகூட யாழ்ப்பாணச் சனங்களிற் பெரும்பான்மையோரால் மறுக்கப்படுகின்றது" எனப்பிரேரிக்க கந்தரோடை ஆங்கிலசாலை மனேச்சர் இதையனுவதித்தனர். இதில்நால்வர் தவிர ஏனையோர் ஒருமுகமாயினர்.

கனம் ஐசக் தம்பையா அவர்கள் பிரேரித்துப் பின்போடப்பட்ட காரியத்தை சேட்கமிஷன் பாடசாலைத்தலைவர் அனுவதித்தும் ஐந்துபேர் தவிர ஏனைய பதினேழுபேரும் மறுத்து ஒருமுகமாயினர்.

அடுக்க "சம ஆசனவிஷயம் பூரணமாய்த் தர்க்கித்து முடியும்வரை சமாசனம் உதவப்பட்ட பாடசாலைகளிலிருந்து அவ்விஷயமாய் விடுகைப் பத்திரம்பெற்று விலகியபிள்ளைகளை சமாசன விஷயம் பிரவேசியாத பாடசாலைகளிற் சேர்க்கலாகா" தென ஸ்ரீமான். டானியேல் அவர்கள் பிரேரிக்க கனம தம்பையாகுரவர் அவர்கள் அனுவதித்தனர். இதிலும் ஐந்துபேர்தவிர ஏனையவர் மறுத்துக்கூறி ஒருமுகப்பட்டனர்.

ஸ்ரீமான். த. கபிலாயபிள்ளையவர்கள் மற்றவர்களிலும் பார்க்க கூடியநேர்மையைக் காட்டினாலும் அமெரிக்காவில் இங்கிலந்தில் சாதிபேதம் இருந்தது என்று கூறி அவர்கள் பிழைசெய்வதால யாழ்ப்பாணத்திலும் பிழைசெய்ய வேண்டுமெனச்சொல்வது பிழை. அமெரிக்கரின் 75 வீதமானோர் இன்னோர் அமெரிக்கனைப் பாடசாலையில் வாங்கில் இருக்கவிடோமென்று கையுயர்த்திக்காட்டி நின்றாரோ நிற்கின்றாரோ கடவுள்தான் அறிவார். எப்படியிருப்பினும் கௌரவ துரைசாமியவர்களைப் போன்றவர்கள் கையுயர்த்தப்போகும் 75 வீதமானோரால் எம்மைப் புறக்கணிப்பது விசனம். இந்த 75பேரில் சுயவரசுக்கட்சிக்காரரான கிராமக்கொம்மிற்றியாட்களின் நிஷ்டூரத்துக்கஞ்சிக் கையுயர்த்தும்படி ஒடுக்கப்படுந் தமிழர் இருபடாவிடில் வீதம் 75 ஆகாது. தெய்வகோபம் நம்நாட்டுள்ள பெரியோரின்மேற் சுமராதிருக்க வேண்டுகிறோம். எமக்குக்கதி முதலாவது தெய்வம் இரண்டாவது அவரனுப்பிய எமது பிரித்தானிய அரசு என்பதை மட்டும் ஒடுக்கப்படுந் தமிழர் அறியவேண்டியது.

---

## கிராமப்பாடசாலைக்கம்மிற்றி விசேஷ மூன்று தீர்மானங்கள்.

யாழ்ப்பாண நாட்டுப் பாடசாலைகளின் வித்தியா சங்கத்தவர்கள் சென்ற 2ம் திகதி கச்சேரியிற் கூடினர். சங்கத்தலைவரான ஸ்ரீமான் நெவின்ஸ் செல்வத்துரையவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

அங்கு மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முதலாவது பள்ளிக்கூடங்களுக்குப் பிள்ளைகளை யனுப்பாது விடுகிறவர்களை விசாரிக்கும் உரித்து கிராமக் கோடுகளிலிருந்து விலக்கப்படவும், அப்படியான வளக்குகள் பொலிஸ் கோடுகளிலே விசாரிக்கப்படவும் ஒழுங்கு செய்யும்படி கவண்மேந்து ஏசண்டுத்துரையவர்களைக் கேட்பது.

இரண்டாவது சமாசனமென்பது பள்ளிக்கூடங்களில் கலந்திருப்பதல்லவென்பதை பிரசித்தஞ் செய்யும்படி ஏசெண்டுத்துரையவர்களைக்கேட்பது.

மூன்றாவது இரகசியமாய் பள்ளிக்கூடங்களுக்கு நெருப்பிடப்பட்டகிராமங்களில் பொலிஸ் விசாரணைக்காவல் வைத்துக்கொள்ளும்படி அரசாட்சியார் தொடங்குவது நல்லதெனபது.

இந்த மூன்று தீர்மானங்களும் சமாசனமென்னும கொள்கையைவிட்டு ஒரு திட்டமான உணர்வைக்கிராமத்தில் உண்டாக்கக்கூடியவை. கலந்திருப்பதால் யாவரும் ஒன்றுவதுமில்லை. உயர்வதுமில்லை தாழ்வதுமில்லை. பிள்ளைகட்கு ஆசனங்

கட்டாயம் வேண்டியது. கடதாசி, மை, பேனை பாவிப்பது தற்காலமுறை. இந்த முறையை ஆசனமின்றி அனுட்டிப்பது முடியாது. இதற்காகவேயன்றி வேறெதற்காகவாவது ஆசனங் கொடுக்கும்படி கட்டளையிடப்படவில்லை. ஆசனமின்றி எப்பிள்ளையும் படிப்பது முடியவே முடியாது. உயர் சாதிப்பிள்ளைகட்கு மட்டும் முடியாததல்லசகலசாதிப்பிள்ளைகளுக்கும்ஆசனமின்றிமுடியாது. ஆகவே அரசாட்சியார்எமக்கு ஏதோ ஒரு விசேஷ சலாக்கியஞ் செய்வதாய் உயர்சாதியார் கருதுவது மிகையாகும்.

## கடிதம்.

ஐயா பத்திராதிப!

நீங்கள் கிறிஸ்தவராயிருந்தும் வேதாகம சைவசித்தாந்தமகாசனசபையிற் தாழ்ந்தப்பட்டவரின் சங்கத்தார் உட்புகவிடாமையையிட்டு அடுத்த இதழில் எழுதவிருப்பதை உங்கள் குறிப்பில் அவதானித்தேன், திராவிடன் பத்திரிகையே இவ்விஷயமாய் எழுதுவது கடமை. ஆகவே இவ்விஷயத்திற் பிரவேசியாதிருக்கத் தங்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
S. M. K.

(குறிப்பு, சைவப்பெரியார் பொதுவாக சைவருக்கெனக்கூடிய கூட்டத்திற் சைவர் எவரும்பிரவேசிக்க இடமுண்டு. சைவரல்லாதோர் சைவர்போல ஆங்கு தரிசனங்கொடுத்தார். சைவரல்லாத இடைச்சாதிகட்கும் சைவரல்லாத ஒடுக்கப்படுவோர்க்கும் ஆங்கு இடங்கிடைத்தது. சைவரல்லாத இடைச்சாதிகட்குஞ் சைவரல்லாத ஒடுக்கப்படுவோர்க்கும் ஆங்கு இடமுண்டென்பதும் பொதுக்கூட்டத்தில் தான்சைவனென்போனுக்கு ஏன் இடமில்லையென்பதுமே நாம் யோசிப்பது. குறிக்கப்பட்ட சூத்திரருக்கு முழுவதும் அந்தமண்டபந் திறந்திருக்க சூத்திரர் அங்குசமுகமாயிருக்க இடமுண்டோ என்றுகேட்டவருக்கு இடமில்லையென்று சொன்னது கேட்டவர்குறையோ அன்றி மறுத்தவர் குறையோ என்பதைமட்டும் கடிதர்யோசிக்கவேண்டியது. ஒரேதெய்வமுண்டெனும் எவனும் மற்றெவனையும் கிட்டவாராதேயென்று சொல்லமாட்டான். கூத்து நோட்டீசிற்போல "இவர்கட்கு இடமில்லையென்று" சொன்னால்இவர்கள் சேட்டிருக்கவுமாட்டார்களே! சாதித்துவேஷசித்தாந்தமல்ல சைவசித்தாந்தம் அந்தமகாசபையில் அமைந்திருக்கவேண்டுமென்பதே யெமது பேரவா.

மற்றது எமது சங்கமும் பத்திரிகையும் சாதிசமயபேதமற்றவை. நாம் எந்தமதமாய் இருப்பினும் பத்திரிகையும்எம்பத்திராதிபகடமையும் எந்தமதத்துக்கும் சம்மதம் உடைய கொள்கையில் நிலைபிறழ்வதேயில்லை. விசேஷமாய் இந்துக்களின் தேசமான யாழ்ப்பணத்திற் பூர்வசமயப் பழக்கமான சாதிப்பழக்கங் கிறிஸ்தசமயத்தையும் பழுதுபண்ணிவிட்டதால் யாழ்ப்பாணத்தின் கிறிஸ்தமத சாதி வித்தியாசத்துக்கும் இந்துமத சாதிவித்தியாசத்துக்கும் யாதோர் வேற்றுமையுமில்லை. எவர் எம்மதஸ்தராயினுஞ் சாதியெனும் பசாசின்வாய்ப்பட்டு அவரின் மதத்தையிட்டுப் பேசுவதாய் எண்ணி வேசாறுதிருக்கப்பணிவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். (ப—ர்.

# புதினக் குறிப்புகள்.

:o:

### வயதுசென்ற பிரயாணி.

நியூயோர்க் நகரத்தைச் சேர்ந்த மிஸிஸ் M. C வில்கொக்ஸ் எனபவ தனது 88-ம் வயதிற் பிரயாணம்பண்ணி லிவர்ப்பூல் நகரத்தைச் சேர்ந்தார் இவ கடந்த 25 வருஷங்களிலும் செய்த பிரயாணம் ஏறக்குறைய 180,000. மைலென்று கணக்கிடப்படுகின்றது.

### ரோட்டில் மரணம்.

சென்றவருட அறிக்கைப்படி இங்கிலாந்தின் பகிரங்க வீதிகளில் வண்டில், கார், கோச்சு முதலானவற்றால் மாத்திரம் மடிந்தோர் தொகை 5,356.

### குள்ள ஸ்திரி.

ரோறி தீவில் பட்சிவளக்குந் தொழிலில் ஒருவயோதிபரும் மகளும் ஜீவிக்கிறார்கள். மிஸ்மேரி எக்காதி என்ற அவவுக்கு வயது 67. உயரம் 2 அடி 8 இன்சு. காலை முதல் மாலைவரையும் குதூகலமாய் பட்சிகளைப் பராமரிப்பதே இவவின்தொழில்.

### அசுத்தத் தண்ணீரின்கேடு.

லியன்ஸ் என்ற பட்டணத்திற் சடுதியாய் கொடிய சுரமுண்டாகி அநேகரைக் கொள்ளை கொண்டது. இதன்காரணம் தண்ணீரெனக் கண்டுபிடித்து தண்ணீர்க் கம்பனியொன்றின் பேரில் 400,000. பவுண் நஷ்ட ஈட்டுவழக்கொன்று ஏற்பட்டு நடைபெறுகிறது.

### தகாத கலியாண உடுப்பு.

மிஸ் லியன்ரெஸ் என்பவளின் விவாகம் சிட்னி நகர ஆலயத்தில் நடைபெறும்போது அலங்கோலமான அவவின் உடையை நீத்து மரியாதையாக உடுக்கும்வரையும் விவாகத்தை நிறைவேற்றமாட்டேனென்று பாதிரியார் கூறினார். உடனே தையற்காரப்பெண்கள் அழைப்பிக்கப்பட்டு மிகக்குறுகிய அந்த உடுப்புடன் துணிசேர்த்தபின்பே மங்கலகாரம் நிறைவேறிற்று.

### பூகம்பங்கள்.

பர்மா தேசத்தில பேகு பட்டணத்துக்கணித்தாக சிலநாட்களின் முன் நிகழ்ந்த பூகம்பத்தில் ஏறக்குறைய 800 பேர் மாண்டார்களாம். பார்சியாவில் தர்கான் என்ற நகரத்தில் கொடிய பூகம்பமுண்டாகி 2000 பேருக்குமேல் மடிந்ததாகவும், 5000 பேருக்குமேற் காயப்பட்டதாகவும். ஓர் அறிக்கை கூறுகிறது.

### நாஸ்தீக கொள்கையின் மோசம்.

ருஷியாதேசத்திற் சிலகாலமாக நடைபெற்றுவரும் நாஸ்தீககொள்கையின் பேறாய் இதுவரை அழிக்கப்பட்டுள்ள கோயில்களுடன் முப்பதினாயிரம் பள்ளிவாசல்கள் (முஸ்லீம் மதாலயங்கள்) அழிக்கப்பட்டனவென்றும் தம்மதத்தைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று ருஷிய முஸ்லீம் மதாபிமானிகள் மறுதேசமுஸ்லீம் தலைவர்களுக்கும, பாப்பாண்டவருக்கும், பாதிரிவேதத் தலைவருக்கும் மன்றாட்டுக்கள் அனுப்பியிருக்கிறார்களாம்.

### அதி வீரச்செயல்.

மிஸ் எமி யோன்சன் என்ற 22 வயதுப் பாலிகை இங்கிலாந்திலிருந்து 2 வாரத்துள் அவுஸ்திரேலியாவைச்சேர்வதாக தனிமையாய் ஆகாயக் கப்பலோட்டிக்கொண்டு புறப்பட்டிருக்கிறாள் ஆண்கள் இதுவரை காட்டிய ஆகாயக்கெட்டிதனங்கள் யாவையும் இதுவெல்லும் என்பதாகக் கூறப்பட்டுகின்றது.

### சந்திர மண்டல பயணம்.

பெவன என்ற அமெரிக்க தனவந்தனும், கிரூஸ்க என்ற ஜேர்மனிய வாலிபனும் தனித்தனியே வருகிற ஆடியாதத்தில் சந்திர மண்டலத்தைக் கிட்டிச்சேரும் பயணத்தைத் தொடக்குவார்கள். பெவன் என்பவரின் கணக்குப்படி 6 வாரத்தில் சந்திரமண்டலத்தைச் சேர்வாராம். தன்னுடன் கூட 6 மாதத்திற்குப் போதிய உணவுடன் ஒரு நாயையும் ஒருபூனையையும் கொண்டு செல்வாராம். க்ஷேமமாய்ப் போய்ச் சேர்ந்தால் அங்கிருந்து பூமியிலிருப்பவருடன் பேசக்கூடிய [illegible] கருவிகளுடன் போவாராம். யாவும் சரிவரின் 15 வருஷத்துள் பூமிக்கு திரும்பி விடுவதாயுங் கூறுகிறாராம்.

### முளைக்க 200 வருஷங்கள்.

சில விதைகள் முளைப்பதற்கு வெகுகாலமெடுப்பதென்பதைப் பரிசோதிக்கும்பொருட்டு சில விநோத காட்சிக்காரர் ஏகோபித்து 1902-ம் ஆண்டு 107 இனமான விதைகளை விதைத்தனர் சில 5 வருடங்களும், சில 20 வருடங்களும்; சில 50 வருடங்களும சில 209 வருடங்களும் முளைக்கச் செல்லுமென்று அவர்கள் இப்போ ரூபித்துக்காட்டுகிறார்கள்.

### நற் சேவைக்கு வினை.

எம் இளவரசர் அவர்கள் ஆபிரிக்காவிலிருந்து ஆகாயமார்க்கமாக வீட்டுக்குத்திரும்பும்போது உதவிக்குக் கூடச்சென்ற ஆகாயக்கப்பலொன்று பயணத்தை முடித்து திரும்பிச்செல்கையில் உடைந்து நொருங்கிப்போயிற்று. அதனுளிருந்த மாலுமியும் இன்னொருவரும் பரிதாப மரணத்துக்குள்ளாயினர்.

### நீலமுட்டை.

இங்கிலாந்தில் ஓர் கோழி நீலமுட்டையிடுகிறதாம். தோற்றத்திற் குட்டையாலேதவிர வேறு வித்தியாசமில்லையாம். இது அடுத்துவரும் பட்சிகளின் காட்சிக்கொண்டாட்டத்திற்குகொண்டு வரப்படுமாம்.

### தீர்ப்பதற்குக் கஷ்டமான வியாச்சியம்.

மிக அழகிய ஓர் நாய்க்குட்டி இருவரில் எவருடையதென ரூபிக்கமுடியாது இருபெண்கள் எவன்ஸ்ரன நகரில றஸ என்ற நீதிபதிமுன கொண்டுவரப்பட்டனர். எவருடைய குரலுக்கு நாய் அமையுமென்று பார்க்கவேண்டுமென்றபோது ஒருத்தி "விலேம இங்கேவா" என்றாள். அது குதித்தோடி அவளின்கைகளைநக்கி வாலாட்டிக் குதூகலித்தது. மற்றவள் "பனி ஓடிவா, ஏறி உட்காரு" என்றாள். அது ஓடிப்போய் அவள் சுட்டிக்காட்டிய கதிரையின் மீதேறி உட்கார்ந்தது. இது நீதிபதிக்கு வெகு ஆச்சரியத்தைக் கொடுத்தது. நீரயோசித்து சாலமோன் ஞானியின் செய்கையைத் தானுஞ் செய்யவெண்ணி "இந்த நாயை நீட்டுக்கு 2 துண்டுகளாக்கி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துண்டைக்கொடுப்பேன்" என்று சொல்லிச் சேவகரை அழைத்து எற்றபடி கட்டளையிட்டான். "எனக்கு முழுச் சம்மதம்" என்று இருவரும் தனித்தனி கூறினர். நீதிபதி ஒன்றுஞ் செய்ய முடியாது வெட்கித்து வழக்கைத் தவணை போட்டார்.

### 46 பிள்ளைகள்.

பிறையம் யங் என்பவனின் 46 பிள்ளைகளிலொன்றாகிய மினிஸ் கேற்ஸ் என்பவன் தன் தகப்பனின் குடும்ப விபரத்தையிட்டும், அத்தனை தொகையான சந்ததியடக்கிய தங்களைப்பற்றியும் ஓர் புஸ்தகமெழுதி $2\frac{1}{2}$ சிலிங் வீதம் விற்பனைக்கு விட்டிருக்கிறான்.

### பழைய ஜேர்மன் அரசர்.

தோல்வியுற்ற கேய்சர் சக்ரவர்த்தி இப்போ விடப்பட்டிருக்கும் தனிமையான விடத்தில் காடுகளைத் திருத்[illegible]லும், வேளாண்மை முதலியன பண்படுத்[illegible]லும் மாத்திரங் காலத்தைக் கழியாது [illegible]ரச் செயல்கள் புரிவதாயுந் தெரிகிறது. [illegible] வாரங்களின் முன் அவர் வசிக்கும் [illegible] வீடுபற்றி எரிந்ததாகவும் கேள்விப்பட்ட அந்தக்ஷணமே தன்னுடனிருந்த தொழிலாளருடன் கெதியாய்ஓடிப்போய் நெருப்பை[illegible] கெட்டித்தனமாய் அழித்துவிட்டதாகவும் பத்திரிகையொன்று கூறுகிறது.

## Letter from Seramban.

There is much ado about nothing in Jaffna at the moment.

The most equitable order issued by the Director of Education that all Schools in Jaffna should provide equal seating accommodation to all children irrespective of caste or creed, appears to have shocked the othodox Hindus and Christians. To show their opposition to the policy in a tangible way the so-called caste Hindus and Christians have burnt down a number of School buildings.

Unlike in other parts of the world the Hindus and Christians in Jaffna are held to-gether by the insoluble bond of blood relationship and it is therefore not a matter for surprise that Christians are one with the Hindus in opposing a much desired reform in our Schools

The depressed classes who profess Hinduism are debarred from having access to Hindu Temples to worship and peculiarly the same restriction operates even to-day in Christian Churches for those of the depressed classes converted to christianity.

These othodox Hindus and Christians who seem to live in a world peculiarly their own should realise that they are living in an era or advanced stage of human evolution and that untouchability finds no sanction in their respective Scriptures.

They should therefore come out of their narrow holes and embrace the opportunity offered by the Education Department and do away with the invidious distinction which is a relic of the past. The depressed classes are never created by an All Merciful God for the rutheless exploitaticn of the high caste Hindus. They should be given equal opportunity to freely develop their faculties in all feilds of activities

Education, of all other things, will raise their standard of living in par with the high caste Hindus.

Inter-dining is a matter to be left to undividual discretion. but equal treatment should be given to the depressed classes in the school room. play ground, temples and the rest will follow in due cause.

I do not say that all Hindus and Christians are bad. There are many among both sections who realise the utter injustice of perpetuating this evil system of caste distinction in an enlightened age but these enlightened folks constitute only an infenistemal portion and tney can do little to help these depressed classes to regain their birth-right.

It is earnestly hoped that the so-called depressed classes will unite to-gether and demand fair-play and justice from the high caste Hindus and Christians.

## THE JAFFA RURAL EDUCATION DISTRICT COMMITTEE.

The Jaffna Depressed Tamils' Service League agrees that the equal sea ting is not mean inter-seating. The children of all the classes must be provided with comfortable seats. Individual seating is better than equal seating for Depressed Tamils' Children. Mr. Nevins Selvadurai President of the R. E. D. C presided over the meeting which was held at Kachchery on the 2nd inst and the following resolutions were passed.

1 That this committee resolves that the Government Agent be requested to be good enough to transfer the pending cases in connection with school defaulters to the Police Court from the Village Tribunals

2 That the committee resolves that the Government Agent be requested to be good enough to give publicity to tom-tom to the fact that by equal seating is not mean inter-seating.

3. That this committee is of opinion that steps should be taken by the Government to place punitive police to villages where undetected burning of schools has occured.

## பகீரதப் பிரயத்தனம்.

உலகிற் பெரிய காரியங்களைச் செய்தவர்யாவருந் தம் விடாத்தொடர்பான முயற்சியிலேயே தாம் நோக்கிய இலக்கைக் கிட்டிச்சேர்ந்து கொண்டாரென்பது தெளிவு. நாம் சரிதங்களையும் இதிகாசங்களையும் வாசிக்கும்போதும், எமது சீவியத்தில் உலகில்நடக்கும் சம்பவங்களை நோக்கும்போதும். எடுத்தகருமத்திற் கண்ணுங்கருத்துமாயிருப்பவர் உலகமனுசரிக்க மகாதீரமானகாரியங்களைத் திடத்துடன் முடித்துப் போடுவதைக்கண்டுள்ளோம்.

மெய்வருத்தம்பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார், எவ்வெவர்தீமையுமேற்கொள்ளார், செவ்வியருமையும் பாரார், அவமதிப்புங்கொள்ளார் அவர்யாரோவெனின், எடுத்தகருமமேகண்ணாயினர். இவ்விதவிடாத்தொடர்பையே பகீரதப்பிரயத்தனமென்று சொல்வது கிருதயுகத்தில் அரசாண்டமன்னவருட் ஸகரசக்கரவர்த்தியானவர் இந்திரர்பட்டம் பெற அஸ்வமேதயாகமென்னும் குதிரைப்பலிசெலுக்தி யாகம்செய்தார் இதையறிந்த இந்திரனவர் அழுக்காறுமேலீட்டால் அந்த யாகக்குதிரையை, பாதாளலோகத்தில் நிஷ்டைகொண்டிருந்தவரானகபிலரின்பின்பக்கத்தில்மறைத்துவிட்டதும் இச்செய்தியறிந்த ஷகரசக்கரவர்த்தியின்மக்களான அறுபதினாயிரவர் பூலோகத்தைத் துளைத்துச்சென்று பாதாளலோகத்திற் கபிலமுனிபின் இல்லம் புகுந்துகொண்டார். புகுந்ததும் யோகத்திலிருந்த ரிஷிகோபத்துடன் நோக்க, இம்மக்கள் பஸ்மீகரமாய் எரிந்தொழிந்தனரென்னுஞ் செய்திகேட்ட அரசனும் துக்கமேலீட்டாலிறந்தான். இவரின் இடத்திற்கு இவரின் பௌத்திரனான அம்சுமந்தன் அரசனானதும் தனது சிறியதந்தையர்க்கு மோட்சம்கிடைக்கும்படி செய்யவேண்டியவை செய்யத்தொடங்கி அவரது சாம்பரை ஆற்றிற்கரைக்க எண்ணவும், கருடபகவான் தரிசனங்கொடுத்து தேவகங்கையைக்கொண்டுவந்து அந்தக்கங்கையிற் சாம்பரைக்கரைத்தால் முத்தியுண்டென்றுரைத்தனர். இதற்காக அரசனும் அவர்புதல்வன் திலீபனும்பகீரதப் பிரயத்தனஞ் செய்தும்அவர்பிரதி கூலப்பட்டனர். எனினும் இவர்கள் வமிசத்துதித்த பகீரதச்சக்கரவர்த்தி இதற்காய் முயன்று இராச்சியத்தை மந்திரிவசம் ஒப்புவித்துத் தவஞ்செய்துவந்ததும், பிரமாதோன்றி உனக்கென்னவரம்வேணுமென்க, பகீரதன் தன்முன்னோர் முத்தியடையத்தேவகங்கையை உலகுக்கனுப்பவேண்டுமென்றனன். அதற்குப் பிரமா கங்கை வெகுவேகமாய்வருவாள் அப்போ உலகம் அழிந்துபோகும். அவளைத் தடுக்க ஈஸ்வரனாலேயன்றி வேறெவராலும் இயலாது ஆகவே ஈஸ்வரனிடம் விண்ணப்பிக்குமாறு பணித்தார். அப்படியேவிண்ணப்பஞ்செய்ததும் ஈஸ்வரன் தன்சடையிற் கங்கையைத்தரிக்க ஒப்புக்கொண்டனர். கங்கைவேகமாய்வந்ததும் ஈஸ்வரன்சடையிற்றங்கிற்று பூலோகத்திற்கு ஒருதுளிநீரும் வாராமையாற் பகீரதன்துன்புற்று மறுபடியும் தவநிலைகொண்டு கங்கையை உலகுக்கனுப்பவேண்டுமென்றும் இல்லையேற் தமது பகீரதப் பிரயத்தனம் வீண்போகுமென்றும் வேண்டிக்கொண்டதும், ஈஸ்வரன் கங்கையைப் பகீரதன் பின்னேகுமாறு கட்டளையிட்டனர். அரசன்பாதாளம்சென்றுஅங்கு ஜன்னு என்னும் ரிஷியின்பக்கமாய்ப்போய்க்கொண்டிருக்க அவர்பின் சென்ற கங்காதேயின்ஜலம் ரிஷியின் இல்லத்தை மிதக்கப்பண்ணிற்று. அதுகண்ட ரிஷி கங்கையை ஆசமனஞ்செய்துவிட்டதும் பகீரதன் சுழன்று ரிஷியின் பாதங்களை அஞ்சலிசெய்து, தேவரீர்! நானே முதலிற் பிரமாவையும் இருவிசை ஈஸ்வரனையும் நோக்கித்தவம்செய்து நம்முன்னோரின் நீசத்தன்மை நீக்க வேண்டி கங்கையைக்கொண்டுவந்தேன். வந்ததும் வழியில் அகஸ்மாத்தாய் நடந்த பிழைக்காகத்தாங்கள் இச்செயல்செய்யின் அடியேனும் பிதிர்களும் கடைத்தேறவேறுவழியுண்டோ? எவ்விதமும் சுவாமிகருணைகூர்ந்து எமக்கிரக்கம் காட்டியருளவேண்டுமென்று வெகுவாய்க் கெஞ்சிக்கேட்டுக்கொண்டனர். இவ்வேண்டுகோட்கிணங்கிய முனிவர் அவ்வாறுகுக என்று சொல்லி கங்கையைத்தமது செவித்துவாரத்தால் உலகில்வெளிவிட்டனர். அப்பாற் பகீரதன் வெகுசந்தோஷ்டியுடன் ஆங்குகங்கையைப் பிதிர்களின் சாம்பரின் மேற்பாயவிட்டுப் பிதிர்கட்கு மோட்ச ஆறுதல் கிடைக்கச் செய்தனன். இப்படியாக விடாமுயற்சியாகப் பகீரதன்செய்தபிரயத்தனமே பகீரதாப் பிரயத்தனமென்பது.

பாடுமியர்திரத்தையமைத்தவர் அதற்காகச் செய்த பகீரதப்பிரயத்தனம் எத்துணைத்தென்பது சொல்லவும்வேண்டுமோ? அமரிக்காவெனும் உலகமுண்டெனச் சொல்லி யதைக் கண்டுபிடிக்க, கொலம்பஸ எனும் மகான் செய்தபிரயத்தனம் என்னமகிமைவாய்ந்தது. புகைவண்டியை ஆதியிற்கண்டுபிடித்து ஓடச்செய்தவரான ஸ்ரீபன் என்பவர் அதற்காகப்பட்ட பிரயத்தனம் எத்துணைத்து! ஆதியில் ஆங்கில அகராதியை எழுதி முடிக்க ‘வெப்சர்’ எனும் பண்டிதர் முப்பத்தாறு வருஷங்களாகத் தம் சீவியத்தை முழுவதுமே செலவு செய்தார். இவர்கள் செயல்களை வீண் செயல்களென்று சொல்லி ஏளனம்பண்ணி நையாண்டி செய்த சாப்பாட்டு மாடர்களும் அக்காலம் இவர்களையிட்டு அல்லாத பொல்லாத காரியங்களெல்லாம் எழுத்திலும் பேச்சிலும் வெளியிட்டனர்தானே. அவர்கள் அப்படிச் செய்த எதிர்ப்புகளையே பகீரதப்பிரயத்தனமெனச் சொன்ன அறிவாளர்களான அறிவீனர் அந்தக் காலத்திலுமிருந்தனர்தானே.

பெரியோரே! மேலேசொன்ன காரியங்களை ஊன்றி போசிப்பீர்களாயின் நாம் செய்துவரும் பகீரதப்பிரயத்தனம் எதென உங்கள் மனதிலே திடமெனத் தென்படும். இதற்காகவே பகீரதப் பிரயத்தனமென்னுஞ் சொல் எப்படியுண்டாயிற் றென்பதையும் பகீரதப் பிரயத்தனமெது வென்பதையும் விபரமாய்க்காட்டினோம். நம்நாட்டில் இருவகையான பிரயத்தனங்கள் உண்டு ஒன்று அடிமையாட்சி, மற்றொன்று அடிமைமீட்சி அதாவது அடிமையாட்சியெனும் பொல்லாதமுட்செடி அனேகநூற்றுண்டுகளின்முன் நல்லசெழுமையான தென்னிந்தியாவில் அநியாய விற்பன்னரான ஆரியரானாலே மந்திரதந்திரசமஸ்கிருத ஆலாபரணத்துடன் விஸ்தீரணமான செந்நெற்களனிகளில் விதைக்கப்பட்டது. இலங்கையின் இராசதானிகளாயும்மகாசெழித்த இடங்களாகவும் இலங்கைமுழுவதுக்கும் போதிய நெற்களைக்கொடுத்துதவிய வயல்களாயுமிருந்த அனுராசபுரம் வன்னியெனுமிடங்கள் தற்போது கொடியவிலங்கினங்கள் வசிக்குங்காடுகளாயும் பற்றை செடிகளாயும், மனுஷர்தங்கியிருக்கமுடியாத கொடிய சுரஸதானங்களாயும் மாறிய தவைவாறே அவ்வாறே எங்கள் தமிழ்நாட்டில் ஆரியரெனும் சண்டாளத்துரோகிகளால் சாதியெனும் மனக்கண்ணுக்குத் தெரியாத சிறுவிதைகள் விதைக்கப்பட்டதும் அவ்விதைகள் முளைத்துவளர்ந்து நம் இந்தியா இலங்கை முழுவதையும் மூட ஐயையோ! தமிழ்மாதுதன் நிலையிழந்து பிறாதீனப்பட்டு மற்றவர்முன் துர்க்கர்த

மும் இடறு கட்டையுமாய் நிற்கின்றான். இந்நிலையிற் தமிழர் தம்மில் ஒருவரையொருவர் சிறிதெனக் கூறியதுடன் நில்லாது சுயநயத்துடன் கூடிய மௌட்டீகமெனும் கொடிய வியாதியின்வாய்ப்பட்டு தீண்டாமையெனும் பெரியதோர் ஆமையைக்கட்டிவைத்துக் கொண்டார். இத்தீண்டாமைசெய்யும் கோளாறோ எண்ணிலடங்கா. இத்தீண்டாமையைப்பற்றிய சரித்திரத்தை வெளியிடுவதே ஜனதர்மமாகும். இத்தீண்டாமையின் சரித்திரத்தைக் கொஞ்சங் கொஞ்சமாயெழுதினாலும் சாதியெனும் பிசாசு வாயைவாயைப் பிளக்கின்றது. பல்லைக்காட்டுகின்றது. உறுமுகின்றது நெருங்குகின்றது. ஆமோ அப்படியுமாயிற்றோ, சொல்லவுமாயிற்றோ எழுதவுமாயிற்றோ என்கின்றது. இச்சாதிப்பிசாசு பாடுபட்டு வெயிற்காய்ந்து மனுஷரின் மனத்தில் வித்திட்டது. அவ்வித்து முளைத்துப் படர்ந்துவளர்ந்து கிளைவிடடுக்கொட்டைபோட்டுக் போட்டகொட்டையும் முளைத்து வருஷம் வருஷமாய்க் கொட்டைகளெல்லாம் முளைத்து பூண்டாய் செடியாய் மரமாய் விருட்சமாய்விட்டனவே, நானோ தமிழ்மக்களை யெண்ணடிமையாக்கி, மடையராக்கி, வஞ்சகராக்கி, ஈனராக்கி, தீனராக்கி, ஆடாக்கி, மாடாக்கி, எருமையாக்கி, கழுதையாக்கி, குரங்காக்கி, நாயாக்கி, நரியாக்கி, பள்ளராக்கி, பறையராக்கி நளவராக்கி, வண்ணராக்கி, துருப்பராக்கி, வலங்கையர் இடங்கையராக்கி, பண்ணுவார் பாட்டுவாளிகளாக்கி, வேளாளராக்கி மறுபடியவரைக் கீழ் ஆளாராக்கி, கரையாராக்கி, திமிலராக்கி குறவராக்கி, அசற்சூத்திராக்கி, சற்சூத்திராக்கி, ஐயையோ! நான் பகீரதப்பிரயத்தனம்செய்துகொண்டிருக்கிறேன். இனியென்ன ஆகவேண்டியதெல்லாம் செய்தாயிற்று. அடிமைகளாக்கிப் பிறரினடிமைகளாக்கிகுடிமைகளாக்கி முடித்துப்போட்டேன். சரி! நான் இன்னும்செய்ய வேண்டிய பகீரதப்பிரயத்தனங்கள் உண்டு. அவைகளை நான் முடிப்பேன் எனக்கங்கணங் கட்டித்தனக்குதவிக்கு நீர்வாரும் ஐயாவாரும் எஜமான்வாரும் எனச் சிலரை கைக்குள்ளே போட்டுத் தன் பகீரதப்பிரயத்தனத்தை முடித்துக்கொள்ளமனமின்றி நெட்டுயிர்த்துக்கண்ணைச் சுழற்றிக் கைவிரல் முறித்து மூலையிலிருந்து எண்ணாதவெண்ணமெல்லாமெண்ணி மனம் புண்ணாகிவேசாறுகிறான்.

இச்சாதிப்பிசாசுக்கு வெட்கமேயில்லை, ரோசமேயில்லை, தான் செய்வது இன்னது பேசுவது இன்னது என்பது தெரியாது, ஆனோ விவேகி, ஆறு அடியாய் வதென்றிருக்க அறுபதடிபாயும் பிழையெதுவோ அதுவெல்லாஞ் சரியென நிரூபிக்கும். ஒன்றும் இரண்டும் ஐந்து எனஸ்தாபித்துத் தர்க்கித்து வெல்லக்கூடிய கணிதமுறையும் இப்பசாசுக்குத்தெரியும். காகம்வெள்ளையென்று சொல்லிநியாயம்பேசும் வன்மை இதற்குண்டு. வெள்ளையென்பது என்ன என்று உலகுக்குத்தெரியாதென்றும் கறுப்பு நிறமேவெள்ளை என்றுஞ் சொல்லும். அதுவுமியலாவிடின் அந்த நிறமல்ல இதுதான் வெள்ளை இதையே நீங்கள் வெள்ளைநிறமென்று சொல்லுங்களென்னும். நான் ஏசென்றிடம் முடியாவிட்டால் கவர்ணரிடம், அன்றேல் இராசமாலிகிதரிடம் அன்றேல் பஞ்சமயோட்சு அரசரிடம் இன்றேல் பிரமாவிடம் அதுவுந்தவறினல் ஈஸ்வரனிடம் தவஞ்செய்தாவது வெள்ளையெனுஞ் சொல்லைக்கறுப்பென அகராதியிற் கூட இருக்கச்செய்வேன் என்கின்றது.

இம்மட்டா? வெள்ளையரை விரட்டிவிடவேண்டுமென்றும் அவர்களுக்கு இந்தநாட்டில் என்ன உரிமையுண்டு? இந்தமுட்செடியையும் நாகதாளியையும் வெட்டியெறியவேண்டுமென்றெண்ண அவர்களுக்கென்ன தத்துவமுண்டு? இப்படியான சுந்தரக்கா சிங்காரவனம் எங்கேயுண்டுஐரோப்பாவின் பூந்தோட்டமெனும் பெல்ஜியதேசம்இதற்கு ஒணிவைக்கவுங்கூடுமோ? நான் தமிழரைப்பிரித்து உடைத்து வைக்க இடையில் பிரித்தானியரெனும்வடுகஞ்சாதியார்இதிற்பிரவேசிக்க என்ன இடமுண்டு? அப்படியேதும் பேசினல் என் வாலிற்கட்டுங்கள் பந்தம் என்று இச்சாதிப்பேய் அட்டகாசம் செய்து யாழ்ப்பாணத்தில் ஓடுபோடாதபள்ளிக்கூடங்களுக்கெல்லாம் நெருப்பிடப் பகீரதப் பிரயத்தனஞ்செய்துகொண்டது.

ஐயையோ! இதன் பிரயத்தனத்துக்கு கிருதயுகத்திருந்த அதே ஈஸ்வரன் கலியுகத்திலும் இணங்குவாரா? மறுமுறை மற்றோர் பகீரதப் பிரயத்தனவிபரம் எழுதுவோம்.

## யாழ்ப்பாண மாணவர் மகா நாட்டில் வரவேற்றுத்தலைவர்

### ஸ்ரீ சுப்பிரமணியமவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு.

(மொழிபெயர்ப்பு)

### சாதியும் வருணாச்சிரம தர்மமும்.

ஊரெங்கும் கிளர்ச்சிகொடுக்கும் ஜனசாரவிஷயமாகிய சாதியின் பேரில் எம் சங்கப்போக்கை தற்போது வெளிப்படுத்துவேன். சாதிபேதத்தின் தற்கால நிலைமைக்கு ஆதாரமாக இதிகாசசாஸ்திரங்களைத் தோண்டி ஆராய்ந்து பலர் வாக்குவாதப்படுகின்றனர். ஜனசார நீதியே யாவற்றிற்கும் முதன்மையாக எம் சங்கம் கவனிக்கவேண்டிய விஷயம். மார்க்கம் இவ்விஷயத்திற் கூறியிருப்பதையும் இதன் ஸ்தாபகத்தையும் ஆராயாது இந்த ஆசாரம் தற்போது கடவுளின் பிள்ளைகள் பலரை மானிட உணர்ச்சியற்றோராய்மாற்றியிருப்பதால் இதைத் தாங்கொணுக் கொடுமையென்றே முழுமனதாகச் கூறுகிறோம். சமத்துவமென்பது ஒரே தன்மையையேனும், ஒப்பனையையேனும் கருதுவதல்ல. ஞானிகள் மூடருடனும்மூடர் ஞானிகளுடனும் சமனுடையினர். ஆனல்மூடரும தேர்ச்சியற்றோரும் தடையின்றி முன்னேறி ஞானிகளாயும் அறிவாளிகளாயும் வரவேண்டுமென்பதே எமது வாஞ்சை. ஆகவே இவ்விஷயத்தில் எம்கொள்கை உங்களுக்குத்துலாம்பரமாய் விளங்கும். சாதிபேதத்திற்கு வருணாச்சிரம தர்மம் ஆதாரமென்றும் மகாத்மா காந்தியவர்கள் இதைச் சன்மானிக்கிறாரென்றும் இந்நாட்களிற் பலர் கூறித்தர்க்கமாடுகின்றனர். வருணாச்ரமத்தின் நிந்தாட்சணையான படமே சாதிபேதமென்பதாக மகாத்மாஅவர்கள் பலதடவை கூறியிருப்பதையாவது, நாளாந்தம தீண்டாச்சாதிகளுடன் உண்டுபருகி அன்னவர்க்கு கூட்டங்களில் சமாசனமிடக கேட்டு நிற்கும் இம்மகான வருணாச்சிரம தர்மத்தை வேதாந்தமுறையில் மாத்திரமாதரிப்பாரன்றி மற்றப்படி அது தீண்டாமையுடன் கூடஅழிக்கப்படினும் ஓர்துளி கண்ணீர் சிதந்மாட்டாரென்பதையாவது இந்தஅறிவாளிகள் அறிந்திரும்பதாய்க் காணேம்.

சாதித்துவேஷத்தை எதிர்க்கும்எங்கள்முயற்சிகளைக் காண்பித்து நாம்சைவசமையத்தை கபடமாய்த் தூண்டிப்பவரென்று குற்றஞ்சாட்டப்படுவதால் மார்க்கமாய் சங்கமாகியநாம் நடுநிலைபுரியவேண்டிய பிரமாணத்தினின்று விலகினேமாவென்பதை சைவனுகிய நான் ஆராயவேண்டியதவசியம். பற்பல கடமைகளும்ஒழுங்கே நடைபெறுவதற்காகவே தொழில் நிமித்தமாகவருணாச்ரமத்தின் நான்குபிரிவுகளுமமைக்கப் பட்டனவன்றி, ஒருவரைமற்றோர் வெறுத்து அபகரித்துச் சிரழிவுண்டாக்கி ஜனசமூகத்தை நிர்மூலப்படுத்துவாற்தகவேயல்ல. இவை தொழிலின் பேரால் வருக்கப்பட்டனவன்றிபுறம்பான சுதந்தரத்தை ஸ்தாபிக்க வல்ல. ஜனசமூகநடபடிகளை முறைப்படுத்தவுமல்ல நடத்தவுமல்ல. ஒருவனை உயர்த்தல்அன்றேல் ஒடுக்குதல் சைவநீதிக்கு முழுமாறு என்பது எமது தீர்மானம். பிராமணன் தன போதகத்துடனும், க்ஷத்திரியன் தன் காப்பாற்றும் வலிமையுடனும் வைசியன் தன் வியாபாரதிறமையுடனும், சூத்திரன் தன உடல்பலத்துடனும் கடவுளுடைய சிருஷ்டிகனனைத்திற்குந் தொண்டு செய்யவே பிறந்திருக்கிறார்கள் என்பதாக மகாத்மா காந்தியவர்கள் கூறுகிறார். இவையொன்றும் மேலென்றவில்லை புத்தியீனக் கொள்கைகள் அழிந்தன. குருவின் ஞானமும் போர்வீரனின்பலமும், வியாபாரியின் நிதார்த்தமும் வேலையாளின் தாழ்மையுமுற்சாகமும் சனசங்க வளர்ச்சிக்கு ஆதாரமாயின. ஒவ்வொன்றிலும் வளர்ச்சியும் ஒற்றுமையுங் காணப்பட்டன. ஜாதியென்பது பக்தி வளர்ச்சிக்கு ஆட்சியாயிருந்தது. அது ஆத்துமாவின அழியாத்தன்மையை விளக்கி பாரபட்சமில்லாக் கடவுளின் பாசத்துடன் யாவரும் ஏற்றத் தாழ்ச்சியின்றி ஈசனை விம்பிக்கலாமென உணர்த்திற்று. செலவு முறையில் சகோதரத்தன்மையுடன் ஐக்கியமாய் வாழவும், தேசிய முறையில் பாரபட்சமின்றி பிரமாணங்கள் எவர்க்கு மொன்றாயிருந்தமைபற்றி ஆன்ம, சரீர, சனசங்க, தேசிய காரியங்கள் பாவிலும் வளர்ந்தோங்கவுமேதுவாயிற்று என [illegible] நுண்ணர் கூற்று. இந்நாட்களிற் போல அந்நாட்களில் ஜாதிபேதம் [illegible] மாயிருக்கவில்லை. காலத்தின் [illegible] ஆத்திரணப்பிந்தவன் தன் நற்கிரியைகளினி [illegible] பிறந்து உண்மைசரீர பொய்ச [illegible] மாறக் கூடியதாகின்றது.

இன்றைய சாதிபேதத்தைக் கவனிக்குமிடத்து, சைவாபிமானம் நம்மவர்க்குள் எவ்வளவு ஆழமாயிருப்பினும் முற்காலத்திலிருந்த நான்குவர்ணங்கள் இன்றுஉண்மையாக இல்லையென்றே சொல்வோம். சாஸ்திர ஆராய்ச்சிப்படியேனும் நீதிபகவானின் கண்முன் தற்போதைய சாதிவித்தியாசத்தை ஓர் மாய்மாலமாகவே காண்போம். ஒருவன் மற்றவனின் தொழிலை ஆசித்ததால், ஒருதொழில் மற்றொருதொழிலிலும்மேம்பாடு அல்லது கூடியசம்பாத்தியமுடைய தாய்க்காணப்பட்டு சாதிசிறப்புகளை நோக்காது ஆங்காங்கு தொழில்களிற் புகுந்தமை காரணமாக, நீதிநெறிகள் யாவுங்கைவிடப்பட்டு காலகதியில் தடுக்கமுடியாதபடி பற்பல சாதிகள் தோன்றலாயின. சம்பாத்தியத்தையும் முன்னேற்றத்தையும் கருதாமல் சுயசுதந்தரங்கள் சலாக்கியங்களை விசேஷமாகக் கருதித் தொழில் நடாத்ததலைவெளிப் போர்வையாக அணிந்தவர்களின் பேரால் சாதிகளினின்று சாதிப்பிரிவினைகள்தொடங்கின. இக்காரணம் பற்றி சமாதானம் அன்பு, முன்னேற்றம் இவற்றினிடத்தில்பொருமைவைராக்கியம், இறுமாப்பு வெறுப்பு முதலியன வளர்ந்து வரலாயின.

இன்னும் சற்றேஆராயுமிடத்து வைதிக அன்றேல் அறிவுக்கடுத்த தொழில்களுக்கு வருணாச்சிரமம் எவ்வித ஆதாரமளிக்கக்காணேம். அப்படியாயின்வருணாச்ரம கோட்பாடுடையோர் தம்தேசத்திற் பலர் பசிபட்டினியாயும் அறிவிலிகளாயுமிருக்கவிட்டு தாம்மாத்திரம் ஆபிரக்கணைக்காக வைத்தியர்களாயும், பாஷாபண்டிதராயும் நியாய துரந்தராயுமிருப்பதேனே? தர்மநெறியற்று ஒரு ரூபாவாலும் சம்பாதித்தல் சைவ நீதிக்கு புறம்பானது. மேலும் வர்ணாச்ரமத்தின்படி சாதிப்பிரிவுகள் நான்கேயாம். யாழ்ப்பாணத்தில பிராமணர் தவிர்ந்த மற்றுள்ள நம்மவர் யாவரும் சூத்திரரென்று ஆறுமுகநாவலரவர்கள் கூறியுள்ளார். அப்படியாயின் இத்தனை பிரிவுகள்பெருக்கமுற்றதற்கு ஆதாரமேதோ? தமிழ்ப் பண்டிதரின் தீர்க்க ஆராய்ச்சிப்படி வேதாந்தகொள்கைகள் திராவிட இந்தியாவுக்குரியனவல்லவென்பதும் தென்இந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள நம்மவர் வருணாச்சிரம தாபத்துக் குட்பட்டவரல்லவென்பதும் வெளிப்படை. யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல இந்தியாவிற்தானும் வருணாச்சிரமம் சரியானபடி ஸ்தாபகமாயிருக்கக்காணேம். ஒருவரைமற்றோர் விரோதியாமலும் வீண்புகழ்தேடாமலும் வெயர்வைசிந்திச் சம்பாதிப்பதையே வியந்து கூறுவதன்பேரில்நான் வர்ணாச்சிரமக் கோட்பாட்டை நன்கு மதிக்கிறேனன்றி மற்றப்படி இது வேறெவ்வித பிரயோசனமுமுடையதெனக்கண்டிலேன்.

(வரும்.)


SAVE MONEY!

AND MAKE ALL YOUR PURCHASE FROM US

We are Direct Importers of Portland cement, Barbed Wire, Iron Bars, Expanded Metal, Galvanized Corrugate Roofing Sheets, Galvanized Palin Sheets, Asbetor Cement Corrugated Roofing Sheets and Flat Sheets for Ceiling and partitions and and all other buildings materiais

We import all Hardware goods direct from England and the Continent and are therefore able to offer better prices than Local Dealers.

Please make your enquiries either from our Branch Office

N. VAITILINGAM & CO.
Grann bazaar,
Jaffna.
or from us

N. VAITILINGAM & CO.
Estate Suppliers & Hardwre Merchants,
31, Third Cross Street,
Colombo.

Telephone, 2216.
Telegrams;--"Envaitilin"


Printed at the Sri Ganesha Press Jaffna, and edited and published by Mr. Joel Paul, Building Contractor Secretary the Jaffna Depressed Tamils Service League on behalf of the Service League at Tellippalai.